2012 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஒரு உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் இவையெல்லாம் உருவாக்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையிலே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம் தேர்வு செய்து, இந்த மூன்று பணிகளுக்கும் ஏற்பாடுகள் செய்து பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற திருவள்ளூர் மாவட்டத்திலும் இப்போது உள் விளையாட்டு அரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான ஆக்கபூர்வமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாவட்ட தலைநகரங்களில் இந்த உள் கட்டமைப்புகளெல்லாம் முடிந்த பிறகு, எதிர்காலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களிலெல்லாம் இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் அமைக்க வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் கொள்கையாக இருக்கிறது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அம்மா அவர்களின் அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

90—

அன்னதானத் திட்டம்

***7861—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர், முத்தனம்பாளையம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலை அன்னதானத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், நகர் மற்றும் வட்டம், முத்தனம்பாளையம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம், 3 ஆம் நிலை செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் உன்னதமான அன்னதானத் திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டு இப்போது சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

முற்பகல் 10—55

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக அரியணையிலே அமர்த்தி, மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய தலைசிறந்த முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகத்திலே இருக்கின்ற வல்லரசு நாடுகள் எல்லாம் பாராட்டுகின்ற வகையில், சிந்திக்கின்ற வகையில், தமிழகத்தை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்கி நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]